# கல்வி உரிமையை மீட்டெடுக்க ஆசிரியர் மற்றும் மாணவர்கள் ஓரணியில் ஒருங்கிணைவோம்!

**கல்வி என்பது மிகக் கூர்மையான அறிவு ஆயுதம், இதன் மூலம் தான் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதை தொலைநோக்குப் பார்வையுடன் நம்பினார்கள் திராவிட இயக்கத் தலைவர்கள்.**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகள் என்பது மன்னராட்சிக்கு எதிரான புரட்சிகள், முதலாளித்துவத்துக்கு எதிரான தொழிலாளர் புரட்சிகள், இடதுசாரி இயக்கங்களின் எழுச்சி எனத் தொடங்கி தொடர்ந்தன.

இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தின் உச்சகட்டமாக, காங்கிரஸின் எழுச்சி இருந்த சூழலில், தமிழகப் பகுதிகளில் ஒரு மாறுபட்ட புரட்சிக்கான களம் உருவானது. அந்த எழுச்சிதான் சமூக பண்பாட்டுப் புரட்சியாக வடிவம் கொண்டது. இன்று வரை அந்தப் புரட்சியின் தாக்கம் தொடர்கின்றது. இந்த சமூக பண்பாட்டுத் தளத்தில் சமூக மாற்றத்துக்காக வித்திட்டவர்கள் அல்லது தொடங்கியவர்கள் நீதிக்கட்சியைச் சார்ந்தவர்கள்தான்.

தொடக்க கால கருவியாக செயல்பட்டு **வகுப்புவாரி பிரதிநிதித்துவம் குறித்து (proportional representation)**.1921ல் சட்டமன்றத்தில் ஒ.தணிகாச்சலம் செட்டியார் பிராமணர் அல்லாதவருக்கு 66% இட ஒதுக்கீடு தீர்மானத்தை முன்மொழிந்தார். அதனை வழிமொழிந்தார் சி.நடேச முதலியார். அது மட்டுமல்ல, பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால், வரி இல்லை (No representation, No Taxation) என்ற அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் முழக்கங்களை நீதிக்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினார்கள்.

இதனைத் தொடர்ந்து, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக, தந்தை பெரியார் தலைமையில் நடந்த மிகப்பெரிய போராட்டத்தின் விளைவாகத்தான், முதல் அரசியலமைப்புச் சட்டத் திருத்தமே கொண்டுவரப்பட்டது.

முதன்முறையாக அரசியலமைப்புச் சட்டத்தில் சமூக கல்வி அடிப்படையில் (socially, educationally backward) என்ற வார்த்தைகள் சமூக கல்வி அடிப்படையில் பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற சட்டப்பிரிவு 15(4) மற்றும் 16(4) சட்ட திருத்தம் (Amendments) கொண்டுவரப்பட்டது என்பது திராவிட இயக்கத்தின் வரலாறாகும்! சமூக நீதியை கல்வித் துறையில் நிலைநிறுத்திய முதல் இயக்கம் நீதிக்கட்சி என்பதில் மாற்றுக்கருத்து இருக்கவியலாது. இதனைத் தொடர்ந்து பெண்களுக்கு இலவசக் கல்வி, பத்தாம் வகுப்பு வரை என்பதைக் கொண்டு வந்துள்ளனர். இதைத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் "ஈ.வே.ரா. நாகம்மையார் நினைவு இலவச பட்டப்படிப்பு" என்றத் திட்டத்தை கொண்டு வந்தார்.

இந்தத் திட்டத்தின் மூலமாக 198990-ஆம் ஆண்டில் கல்லூரிகளில் பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகமானது. அதேபோல், **"மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம்" 1989ஆம் ஆண்டு கலைஞரால் தொடங்கப்பட்டது**. எட்டாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு, இந்தத் திருமண உதவித்தொகை வழங்கப்பட்டது. இதன் மூலம் பெண் கல்வி மேம்பட்டது. எனவே, திராவிட அரசுகள்தான், பொது கல்விக்கும், குறிப்பாக "பெண்கள் கல்விக்கும்" ஒரு தலைவாசலாக அமைந்துள்ளது.

### பொதுக் கல்வியின் தொடக்கம்

கல்வி என்பது மக்களின் பண்பாட்டு அடையாளம், ஒவ்வொரு மாநிலத்திற்கும் வேறுபட்ட தனித்துவம் இருக்கும். எடுத்துக்காட்டாக, தமிழகத்தை பொறுத்த வரை "சமூகநீதிக்" கொள்கையின் அடிப்படையில் "எல்லோருக்கும் எல்லாம்" என்ற கருத்தியலின் அடிப்படையில், தமிழ்நாடு இன்று, கல்வியில், குறிப்பாக உயர்கல்வியில் சிறந்த மாநிலமாக விளங்குகின்றது. இந்தக் கல்வி கடந்து வந்த பாதையைக் காண்போம், கல்வி என்பது நமது தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு காலக்கட்டத்தில் மறுக்கப்பட்டது என்பது கடந்தகால வரலாறு. பொதுக் கல்வி என்பது கிடையாது. அரசின் மானியம் என்பது வேதக் கல்விக்கும், ஸ்மிருதிக் கல்விக்கும் மட்டுமே தாராளமாக வழங்கப்பட்டது.

கிறித்துவ மிஷனரிகளின் வருகைக்குப் பிறகுதான், குறிப்பாக, 1813 மற்றும் 1833 பட்டயச் சட்டங்கள் மூலமாக கல்வி என்பது பரவலாக்கப்பட்டது, அனைவருக்கும் கல்விப் பயிலும் வாய்ப்பும் கொண்டு வரப்பட்டது,

ஏடறியாத, எழுத்தறியாத சமுதாயத்தை கல்விக் கண்திறந்து, வேலை வாய்ப்புக்கான பாதையையும் உருவாக்கித் தந்தது. "மெக்காலேயின் கல்வி" முறைதான் நமது தமிழ்ச் சமூகத்திற்கு விழிப்புணர்வையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்கியது. ஆங்கில அரசாங்கத்தைப் பொருத்தமட்டில், சட்டப்படி மக்களிடமிருந்து வாங்குகின்ற வரிப்பணத்தில் ஒரு பைசா கூட மதக் கல்விக்கு பயன்படுத்தக் கூடாது என்கிறது. அப்படி ஒரு மதச்சார்பற்ற கல்விமுறை (secular education) கடைபிடிக்கப்பட்டது.

### பெண் கல்வி:

நீண்ட காலமாக பெண்களுக்கு கல்வி என்பது மறுக்கப்பட்டது ,இந்த இருண்ட சூழலில் 1849ல் வங்காளத்து ஆட்சிக்குழு உறுப்பினர் **ஜான் இலியட் ட்ரிங் வாட்டர் பெத்தூன்** (John Eliot Drink water Bethune) என்பவர்தான் முதல்முறையாக கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் தனது சொந்தச் செலவில் சிறிய அளவில் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார். இங்கு தான் வங்காளத்து ஈஸ்வர சந்திர வித்யாசாகர் பணிபுரிந்தார். பெத்தூன் இறந்த பிறகு, டல்ஹௌசி பிரபுவும், (Lord Dalhousie) அவரது மனைவியும், தனது வாழ்நாள் ஊதியத்தின் பெரும் பகுதியை அந்தப் பெண்கள் பள்ளிக்குச் செலவிட்டனர். இந்தப் பள்ளிதான் 1879ல் "ஆசியாவின் முதல் பெண்கள் கல்லூரியாக" பெத்தூன் கல்லூரி என்ற பெயரில் தொடங்கப்பட்டதாகும்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை



பேராசிரியர் **தேன்மொழி பொன். முத்துராமலிங்கம்**,
மாநில ஒருங்கிணைப்பாளர் – திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கம்

எழுதிய, கால்டுவெல் பாதிரியார் "திருநெல்வேலி பண்ணையபுரத்தில்" 1842ல் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இதில் ஆங்கிலம், புவியியல், வரலாறு போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட சாட்லர் கமிஷன் (saddler commission) 1917 மூலம் கொண்டுவரப்பட்ட கல்கத்தா பல்கலைக்கழகச்சட்டம்தான் முதன்முறையாக பெண்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டுமென்ற அவசியத்தை வலியுறுத்தியது. இதைத்தொடர்ந்து நீதிகட்சி மற்றும் திராவிட இயக்கங்கள் பெண் கல்விக்காக வழங்கிய பங்களிப்பு என்பது ஏராளம்! 1901-ல் படித்த பெண்களின் எண்ணிக்கை ஒரு சதவீதமாகத் தான் இருந்தது, இன்று படித்த பெண்களின் எண்ணிக்கை 75சதவீதமாக இருக்கின்றது. இதற்கு, திராவிட இயக்கங்களின் பங்களிப்பு மிக முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

1910-ல் சென்னை பல்கலைக்கழகத்தில் சாதி வாரியாக மாணவர்கள் சேர்க்கைக்கான அனுமதி கிடைத்துள்ளது. இந்தப் புள்ளிவிவரம் அன்றைய சமூகம் மற்றும் கல்வி நிலையை நமக்கு அப்படியே உணர்த்தும். அந்த ஆண்டில் 592 பேர் பல்கலைக்கழகத்தில் படிக்க சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களில் பிராமணர் 433, பிராமணர் அல்லாதோர் 95, கிறிஸ்தவர் 52, முகமதியர் 6, பிறர் 6. இப்புள்ளி விவரத்தை வெளியிட்ட அன்றைய அரசு, கல்வித்துறையில் உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை சுட்டிக்காட்டியது .இது கர்சன் பிரபுவின் (Lord Curzon) காலகட்டம். எனவே, கர்சன் பிரபு கல்வித்துறையில் உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை சுட்டிக்காட்டி, இந்த நிலையைப் பற்றி சிந்திப்பதற்காக, ஒரு கல்விக்கான மாநாட்டையும் கூட்டினார்.

நமது பாடப் புத்தகங்களில் யார் யாரெல்லாம் தூற்றப்படுகிறார்களோ, துரத்தப்படுகிறார்களோ அல்லது மறைக்கப்படுகிறார்களோ அவர்கள் அனைவரும் அடித்தட்டு மக்களுக்கு பொதுக் கல்வியை வழங்கப் பாடுபட்டவர்களாகும். குறிப்பாக, மெக்காலே பிரபு, ட்ரின்க் வாட்டர் பெத்தூவான், டல்ஹௌசி பிரபு, கால்டுவெல், கர்சன் பிரபு போன்றவர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

### குலக்கல்வித் திட்டம்!

எனவே, நாடு பிடிக்கும் குறிக்கோளில் இருந்த ஆங்கிலேயர்கள் கூட மனிதாபிமான அடிப்படையில், நமக்கு கல்வியை வழங்கினார்கள். ஆனால், நாட்டு வளர்ச்சியில் அக்கறையுடைய நமது ஒன்றிய அரசு இன்று புதிய கல்விக் கொள்கையின் மூலமாக நமது கல்வி உரிமையை உருக்குலைக்கிறது.

1953-ஆம் ஆண்டு இராஜாஜி அவர்களின் தலைமையில், அண்ணல் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட "வரதா" கல்வித் திட்டத்தின் அடிப்படையில், "குலக் கல்வித் திட்டம்" கொண்டுவரப்பட்டது. 1954ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள், இந்தக் குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக மிகப்பெரிய அளவில் போராட்டத்தைக் கட்டமைத்து, அதை விரட்டினார். அந்தக் **"குலக்கல்வித் திட்டம் தான்", இன்றைக்கு "தேசிய கல்விக் கொள்கை 2020"** , என்ற வடிவில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கல்வி என்பது சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம், இவற்றோடு பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை ஆகிய ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையாகவும், அச்சாணியாகவும் இருக்க வேண்டும், ஆனால், இவை அனைத்துக்கும் முற்றிலும் முரணாக பிற்போக்கு மதவாத அமைப்புகளின் விருப்பத்திற்கு ஏற்ப "தேசியக் கல்விக் கொள்கை 2020" (NEP) மூலம் மதவாதத்தைத் திணித்து, இந்தியாவின் பன்முகத் தன்மையை அழித்து, மாநில உரிமைகளை பறித்து, கல்வியை தனியார்மயமாக்க வழித்தடம் அமைக்கிறது. இதன் மூலம் சமூக நீதி, இட ஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை ஆகிய உரிமைகளையும், சலுகைகளையும் நாம் இழக்க நேரிடும்.

அதுமட்டுமல்ல, சமத்துவமற்ற சமுதாயத்தின் அடையாளமற்ற நபராக நாம் மாற்றப்படுவோம் என்று தன்னுடைய "தேசியக் கல்விக் கொள்கை 2020 எனும் "மதயானை" என்ற புத்தகத்தின் மூலம் பொது மக்களின் பார்வைக்கு கொண்டு வந்துள்ளார், நமது மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் துணிச்சலானதும், நடைமுறை சாத்தியமானதுமான கருத்துக்களை கலங்கரை விளக்கமாக முன்வைத்து இந்தப் புத்தகத்தை எழுதி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திய அமைச்சர் அவர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்.

### மாணவர் - ஆசிரியர்களின் அரண்!

சமூக விடுதலை வேட்கை, ஆழ்ந்த கொள்கையுணர்வு மற்றும் நீண்ட கால கல்வி இலக்குகளை உருவாக்கும் எண்ணத்தில், நமது திராவிட இயக்கத் தலைவர்கள் நீதிக்கட்சி தொடங்கி, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் நமது திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரை நமது கல்வி உரிமையை நிலைநாட்ட அளப்பரிய பங்காற்றியுள்ளனர்.

அந்த வரிசையில் சுயமரியாதையின் வடிவமான தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று வழிநடத்தும் "திராவிட மாடல் அரசு" மும்மொழிக் கொள்கை முன்மொழியும் "தேசியக் கல்விக் கொள்கையை" ஏற்று 'PM SHRI' பள்ளிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் இட்டால்தான், ரூபாய் 2,152 கோடியை, "சமக்ர சிக்க்ஷா அபியான் திட்டத்திற்கான" ஒன்றிய அரசின் நிதி விடுவிக்கப்படும் என்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள், ஒன்றிய அரசு 2000 கோடி ரூபாய் அல்ல, 10000 கோடி ரூபாய் கொடுப்பதாக சொன்னாலும், நாங்கள் கையெழுத்துப் போட மாட்டோம். அப்படி கையெழுத்துப் போட்டால் நம்முடைய தமிழ் சமூகம் 2000 ஆண்டுகள் பின்னோக்கி சென்று விடும். அதை நான் ஒரு போதும் செய்ய மாட்டேன், மாறாக எனது தலைமையிலான மாநில அரசே வழங்கும் என்று அறிவித்து, மாணவர் ஆசிரியர் சமூகத்தின் அரணாக நிற்கிறார். எனவே நமது முதல்வர் அவர்களுக்கு ஆசிரியர் மற்றும் மாணவர்கள் சார்பாக எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

கல்வியை அடிப்படையாகவும், ஊடகமாகவும் கொண்டு, சமூக சமத்துவத்தையும், சமூக நீதியையும் பெற்றிட வேண்டுமென்பதற்காக நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் "எல்லோருக்கும் எல்லாம்" என்றக் கருத்தியலின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். குறிப்பாக, "நான் முதல்வன் திட்டம்" நமது தமிழ்நாட்டு மாணவர் ஒருவர் உலகின் எந்த பல்கலைக்கழக மாணவரை விட தரமும், தகுதியும், தாழ்ந்தவர்கள் அல்ல என்பதற்காக, தமிழ்நாட்டு மாணவர்களின் மென்திறன்களையும், தொழில்நுட்பத் திறன்களையும் மேம்படுத்துவதற்காக, பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.

இதன் மூலம், தொழில் சார்ந்த வல்லுநர்கள், மாணவர்கள் பயிலும் இடங்களுக்குச் சென்று, பயிற்சி அளிக்கின்றனர். இதன் மூலம் மாணவர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரியக்கூடிய வாய்ப்புகளும், வசதிகளும் உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 41லட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். சற்றேறக்குறைய ஒரு லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் பணி ஆணை பெற்றுள்ளனர். **மேலும், தமிழ்நாடு அரசு கல்லூரிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, மொத்தம் 207 கோடி 82 லட்சம் 47 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய கட்டிடங்கள், நமது முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

### சமூக நீதி விடுதிகள்

1912-ஆம் ஆண்டு டாக்டர் சி. நடேசனார் அவர்களால் உருவாக்கப்பட்ட "திராவிடன் இல்லம்" மாணவர் விடுதி சென்னைக்கு படிக்க வரும், பல்கலையிலும் ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒளிவிளக்காக அமைந்தது. அதன் தொடர்ச்சியாக, இன்று மாநிலம் முழுவதும் மொத்தம் 2,739 விடுதிகள் மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. இதில் 1.79.568 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள். நீதிக்கட்சி விதைத்த விதை இன்று ஆல விருட்சமாக காட்சியளிக்கின்றது.

இந்த விடுதிகளுக்கு "சமூக நீதி விடுதிகள்" என்று பெயர் சூட்டியதன் மூலமாக, நாடு எத்தகைய சமூகநீதி தளிர்க்கும் மண்ணாக மாற வேண்டுமென்ற நோக்கத்தை, நமது திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றார். இந்தியாவில் 89,441 அரசு பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. கடந்த 2014 முதல் 2024-ஆம் ஆண்டுகளில் பெருமளவில் உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசத்தில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

"சமத்துவத்தை" நோக்கிய பயணம் என்பது எளிமையானது அல்ல. அதை நடைமுறைப்படுத்தவும், பின்பற்றவும் ஆழமான இலட்சியப்பிடிப்பும், அர்ப்பணிப்பு உணர்வும் வேண்டும் என்பதை **Thomas Picketty** மற்றும் **Michael sandel** எழுதிய **"சமத்துவம்"** Equality என்ற நூல் வலியுறுத்துகின்றது.

**எனவே, கடந்த 100 ஆண்டுகளில் சமத்துவம் நோக்கிய நமது பயணத்தில் "இந்தி" என்கின்ற ஒரு மொழியை ஏற்றுக்கொள்ளாமலே, கல்வியில், வேலை வாய்ப்பில், பொருளாதாரத்தில், சமூக நல்லிணக்கத்தில், தமிழ்நாடு முன்னேறியிருக்கின்றது. சர்வதேச குறியீடுகளில் இந்திய ஒன்றியத்தில் முன்னேறிய மாநிலமாக இன்று "தமிழ்நாடு" முன்னேறியிருக்கிறது என்றால், நமது திராவிட இயக்கத் தலைவர்களின் அயராத பணி மற்றும் அவர்களுடைய முற்போக்கு செயல் திட்டங்கள் ஆகியவற்றால் மட்டுமே சாத்தியமானது.**

சமதர்மத்தையும் சமூக நீதியையும் அழித்து, சாதனத்தையும், மனுதர்மத்தையும் மீண்டும் புதுப்பிக்க நினைக்கும் பாசிச சக்திகளை அடக்கும் அங்குசமாகயிருக்கும் நமது ஒப்பற்ற 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், 'சனாதனத்தை ஒழிப்போம்' என்று உரத்த குரலெழுப்பிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், ஆசிரியர்கள் என்றென்றும் உயிர்மூச்சு உள்ளவரை துணை நிற்போம் என்பதோடு, கல்வி என்பது மாநில பட்டியலில் தான் இருக்க வேண்டுமென்பதையும் நிறைவாக ஆசிரியர்கள் சார்பாக மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

**தொடரட்டும் திராவிட மாடல் அரசு!**
**வெல்லட்டும் திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கம்!**
**வீழட்டும் பாசிச மதவாதக் கொள்கை!**
**மலரட்டும் மாநில சுயாட்சி!**

---

திருச்சி டி.வி.எஸ். டோல்கேட்டில் கட்டப்பட்டு வரும்

## காமராஜர் நூலகம் - அறிவுசார் மையக் கட்டிடப் பணிகள்!

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்!**

திருச்சி, ஆக. 1 -

திருச்சி டி.வி.எஸ். டோல்கேட்டில் கட்டப்பட்டு வரும் காமராசர் நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டிட பணிகளில் முதல்தள கான்கிரீட் அமைக்கும் பணியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 21.3.2025 அன்று காணொளிக் காட்சி வாயிலாக திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் உலக தரத்திலான காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

அதை தொடர்ந்து அசுர கதியில் இந்த நூலக கட்டுமானப் பணிகள் நடந்து வருகிறது. திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் ரூ.290 கோடி மதிப்பில் அமைக்கப் பட்டு வரும், இந்த மாபெரும், உலகத்தரத்திலான கரமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தின் பணிகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவ்வப்போது நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

இந்நிலையில் கட்டுமானப்பணியின் முக்கிய நிலையான முதல் தளத்திற்கு கான்கிரீட் அமைக்கும் பணிகள் நேற்று துவங்கியது. இதில் கலந்து கொண்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முதல்தள காங்கிரீட் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது மண்டலக்குழுத் தலைவர் மதிவாணன், கட்டிடப் பொறியாளர்கள் அரசு உயர் அதிகாரிகள், வல்லுனர்கள் உடன் இருந்தனர்.

---

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று !

6 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக.1-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (01.08.2025) திருவொற்றியூர் மண்டலம், வார்டு-5ல் சௌந்தர பாண்டி நகரில் உள்ள வி.கே மஹால், இராயபுரம் மண்டலம், வார்டு-55ல் ஏழு கிணறு, புனித சேவியர் தெருவில் உள்ள சமூகநலக்கூடம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-98ல் கீழ்ப்பாக்கம், ஆஸ்பிரன் கார்டன் முதல் தெருவில் உள்ள 98வது வார்டு அலுவலகம், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127ல் கோயம்பேடு, காளியம்மன் கோயில் தெரு, சென்னைக் குடிநீர் வாரிய வளாகத்தில் உள்ள பேட்டரி மூன்று சக்கர வாகன நிறுத்துமிடம், ஆலந்தூர் மண்டலம், வார்டு-157ல் ஆற்காடு சாலையில் உள்ள சான்றோரகம் அரங்கம், அடையாறு மண்டலம், வார்டு-173, கஸ்தூரிபாய் நகரில் உள்ள சமூகநலக் கூடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில்

## தூய்மைப் பணியாளர்களுக்கான 25 புதிய வாகனங்கள்

**காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்**

சென்னை, ஆக. 1 -

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வளசரவாக்கம், மண்டல அலுவலகத்தில் கூடுதலாக 25 புதிய B.O.V. வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைக்கும் நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளரும் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., பங்கேற்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வளசரவாக்கம், மண்டல அலுவலகத்தில் நேற்று 31.07.2025 காலை 8.00 மணியளவில் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிப்பதற்காக கூடுதலாக 25 புதிய B.O.V. வாகனங்களை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே. ராஜன், பகுதி பொருளாளர் கே.ராஜி, எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள் ச.சங்கர்கணேஷ், எம்.சி., செல்வி ரமேஷ், எம்.சி., ரமணி மாதவன், எம்.சி., சாந்தி ராமலிங்கம், எம்.சி., வட்ட கழக செயலாளர் ஆ.செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் உடனிருந்தார்கள்.



திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மறைந்த மாவட்ட இலக்கிய அணி தலைவரும் கழக செயல் மறவருமான டி.எஸ்.அண்ணாதாசன் என்கிற மாரிமுத்து அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு தலைமை ஏற்று அண்ணாதாசன் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.